Previous Date of examination : 07/06/2022

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.63/2018

2022-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா. 3 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரத்தீவ்ராஜ் | வயது | 27 /2022 |
| தகப்பனார் பெயர் | அந்தோணிசாமி | ஜாதி | |
| தொழில் | டிரைவர் | மதம் | |
| ஊர் | ஓவரூர் | தாலுக்கா | |

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது ஓவரூரில் வசித்து வருகிறேன். டிரைவராக மஸ்கட்டில் வேலை பார்க்கிறேன். எனக்கு எதிரிகளை தெரியும். 2015-ம் வருடம் எங்கள் ஊரில் வடுவழகன் என்பவர் இறந்துவிட்டார். அந்த இறப்பு சம்பவத்திற்கு எதிரி செந்தில்நாதன் (சாட்சி நீதிமன்றத்தில் நடுவில் நிற்கும் எதிரி செந்தில்நாதனை சரியாக அடையாளம் காட்டுகிறார்) வந்திருந்தார். அவருடன் மடப்புரத்தை சேர்ந்த நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளில் மூன்றாவதாக நிற்கும் எதிரியும் வந்திருந்தார். ( சாட்சி மூன்றாவதாக நிற்கும் எதிரியின் பெயர் குறிப்பிட்டு கூறவில்லை. எதிரி முருகானந்தம் மூன்றாவதாக நிற்கிறார்.) உதயகுமார் மற்றும் எனது நண்பர்கள் மூலம் மேற்படி எதிரிகள் எனக்கு அறிமுகமானார்கள். அவர்கள் வெளிநாட்டிற்கு ஆள் அனுப்புவதாக சொன்னார்கள். நான் எனது தகப்பனாரிடம் கேட்டு சொல்வதாக சொன்னேன். என்னிடம் செந்தில்நாதன் ரூ-1,20,000/- மலேசியா செல்ல ஆகும் என்று சொன்னார். பின்னர் பேசியதில் 1 லட்சம் பணம் கொடுக்குமாறு சொன்னார். தஞ்சாவூரில் மருத்துவபரிசோதனைக்கு செல்லவேண்டும் என்று சொன்னார்கள். மருத்துவ பரிசோதனை முடித்துவிட்டு தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஒரு அலுவலகத்தில் வைத்து என்னிடம் ரூ.30,000/-த்தை எதிரி செந்தில்நாதன் வாங்கிக்கொண்டார். இரண்டு, மூன்று நாட்களில் விசா வந்துவிடும் என்று சொன்னார்.

பின்னர் விசா நகலை காட்டி பணம் அனுப்புமாறு சொன்னதால் எதிரி செந்தில்நாதனின் இந்தியன் வங்கி கணக்கில் ரூ.20 ஆயிரம் அனுப்பினேன். அதன்பிறகு சென்னையில் உள்ள மலேசியா எம்பேசிக்கு வரச்சொல்லி அங்கு போனோம். இரண்டு நாட்களில் பிளைட் என்று சொன்னார்கள். எம்பேசிக்கு போய்விட்ட மறுநாள் எதிரி முருகானந்தம் எனது வீட்டிற்கு வந்து ரூ.50 ஆயிரத்தை பெற்றுக்கொண்டார். மறுநாள் நான் போன் செய்து கேட்டதற்கு டிக்கெட் கேன்சல் ஆகிவிட்டது. 10 நாட்கள் வெயிட் செய்யுங்கள் என்று எதிரி செந்தில்நாதன் சொன்னார். அதன்பிறகு கால் செய்ததற்கு அவர் போன் சுவிட்ச் ஆப் ஆகிவிட்டது. மதுரையில் நாசா டிராவல்ஸில் பணம் கொடுத்து சையது முகமது மூலமாக அனுப்புவதாக சொல்லியிருந்ததால் அந்த சையது முகமது என்பவரின் நம்பர் என்னிடம் இருந்தது. அவருக்கு நான் போன் செய்து கேட்டபோது பணம் என்னிடம்தான் உள்ளது. பாஸ்போர்ட் நகலும் என்னிடம்தான் உள்ளது. செந்தில்நாதன் அனுப்பாவிட்டாலும் நான் அனுப்புகிறேன் என்று சொன்னார். பின்னர் 2 மாதங்கள் ஆகியும் என்னை வெளிநாட்டிற்கு அனுப்பவில்லை என்பதால் எனது பணத்தையும், பாஸ்போர்ட்டையும் கொடுத்துவிடுமாறு சையது முகமதுவிடம் கேட்டேன். அதற்கு சையது முகமது செந்தில்நாதன் சொன்னால்தான் கொடுப்பேன் என சொல்லிவிட்டார். செந்தில்நாதனின் போன் நாட்ரிச்சபுல் என்று வந்தது. அவரை கண்டுபிடிக்கவில்லை. அதன்பிறகு நானும், என்னை போல் பாதிக்கப்பட்ட நபர்களும் சேர்ந்து திருவாரூர் காவல்துறையில் வந்து புகார் கொடுத்தோம். அதன் பிறகு செந்தில்நாதனை பெரம்பலூர் கைது செய்ததாக தெரியவந்து அவரை காவல் ஆய்வாளர் அழைத்து வந்து செந்தில்நாதனை விசாரித்தார்கள். அப்போது செந்தில்நாதன் பணம் வாங்கியதை ஒப்புக்கொண்டார். அவரிடமிருந்து செல்போனும், இரண்டு பாஸ்போர்ட்டுகளும் கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் என்னுடையதுதான். ( **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னுடன் ராமநாதன் என்பவரும் சாட்சியாக கையெழுத்து போட்டார். ராமநாதன் என்பவரும் என்னைபோல் பணம் கட்டியவர் ஆவார். என்னிடம் காட்டப்படும் செல்போன் மற்றும் இரண்டு பாஸ்போர்ட் ஆகியவை எனது முன்னிலையில் எதிரி செந்தில்நாதனிடமிருந்து கைப்பற்றப்பட்டவைதான். ( **செல்போன் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. J 3617895 என்ற எண் கொண்ட பாஸ்போர்ட் அ.சா.ஆ.10 ஆகவும், M1554461 என்ற எண் கொண்ட பாஸ்போர்ட்**

**அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னுடைய பாஸ்போர்ட்டை நீதிமன்றத்திலிருந்து மனு செய்து பெற்றுக்கொண்டேன். அந்த பாஸ்போர்ட்டை நீதிமன்றத்திற்கு நான் எடுத்து வரவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

அருள்ஜோதி என்பவரை தெரியும் என்றால் சரிதான். அருள்ஜோதிதான் முதன்முதலில் துக்கவீட்டில் அவருடைய தம்பியை வெளிநாட்டிற்கு தம்பியை அனுப்பியுள்ளதாகவும், என்னை வெளிநாடு செல்லவிருப்பமா? என கேட்டார் என்றால் சரிதான். செந்தில்நாதனுக்கு வங்கி கணக்கு மூலம் அனுப்பியதற்கான செலானை போலிசாரிடம் நான் கொடுத்துள்ளேன். நான் அவ்வாறு வங்கி மூலமோ, நேரடியாகவோ செந்தில்நாதனிடம் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். முதலில் கார்த்திதான் எதிரிகள் மீது கொடுத்தார். நான் புகார் எதுவும் தனியாக கொடுக்கவில்லை. 1வது எதிரியை எப்போது கைது செய்தார்கள்என்று எனக்கு தெரியுமா என்றால் பெரம்பலூரில் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என் முன்பாக பொருட்கள்எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. செல்போனும், இரண்டு பாஸ்போர்ட்டும் கைப்பற்றினார்கள். அந்த பாஸ்போர்ட் எங்கள் ஊரில் உள்ள இரண்டு நபர்களுடைய பாஸ்போர்ட் ஆகும். பெயர் தெரியவில்லை. என் முன்னிலையில் பாஸ்போர்ட் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது வெளிநாட்டில் வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் என்னை யாரும் பணம் வாங்கிக்கொண்டு ஏமாற்றவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

2வது எதிரியை நான் நேரில் பார்த்தது இல்லை என்றால் சரிதான். செல்போன் மூலம் பேசியுள்ளேன். அவருடன் பேசிய செல்போன் நம்பரை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் சையது முகமது என்பவரிடம்தான் செல்போனில் பேசினேன் என்றால் பெயர் சரியாக ஞாபகம் இல்லை, சையது முகமதுவா, சையது சுல்தானா என்று தெரியவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள முதல் நபர்தான் அவர். ( சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள சையது சுல்தானை அடையாளம்

காட்டுகிறார்) நான் சொல்வதுபோல் 2 வது எதிரியிடம் செல்போனில் பேசியது இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல 2 வது எதிரி என்னிடம் வாக்குறுதி எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. 2 வது எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் தொடர்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

**3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

கார்த்தி கொடுத்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்று சொன்னால் சரியல்ல. பணம் கொடுத்திருந்தது சம்பந்தமாக எழுதியிருந்தது. நான் பணம் கொடுத்து ஏமாந்தது சம்பந்தமாகவும் சொல்லியிருந்தது. அதனால் நான் தனியாக புகார் கொடுக்கவில்ல என்றால் சரிதான். கார்த்தி புகார் கொடுத்த அன்றுதான் என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். முருகானந்தத்தை போலிஸ் ஸ்டேசனில் என்னை விசாரித்தபோது பார்த்தேன். அப்போது காலை 10.00 மணி இருக்கும் என்றால் சரிதான். காலை 10.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை நாங்கள் காவல் நிலையத்தில் இருந்தபோது முருகாந்தமும் இருந்தார் என்றால் சரிதான். நாங்கள் புகார் கொடுத்ததால் முருகானந்ததை கொண்டு வந்திருந்தார்கள். நான் சொல்வது பொய் என்றும் முருகானந்தமும் புகார் கொடுக்க வந்தார் என்றால் தெரியாது. 3 வது எதிரி முருகானந்தம் எனக்கு எப்படி பழக்கம் என்றால் எங்கள் ஊர் துக்க நிகழ்வுக்கு வந்தபோது பழக்கம். நான் சொல்வதுபோல் எனக்கும், 3 வது எதிரிக்கும் பழக்கம் எதுவும் கிடையாது என்றும், எவ்வித கொடுக்கல், வாங்கலும் இல்லை என்றால் சரியல்ல. நான் முருகானந்தத்திடம் பணம் கொடுத்த சாட்சி உள்ளார்களா? என்றால் உள்ளார்கள். எனது அப்பாவிற்கு தெரியும். எனது அப்பாவிற்கு தெரியும் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் நான் சொன்னேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் சொல்லிகொடுத்தபடி சாட்சியமளித்தால்தான் பணம் கிடைக்கும் என போலிசார் சொன்னதால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Previous Date of examination : 07/06/2022

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No.63/2018**

2022-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 18 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா. 4 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அரவிந்சாமி | வயது | 26 /2022 |
| தகப்பனார் பெயர் | கிருஷ்ணமூர்த்தி | ஜாதி | |
| தொழில் | சிற்பவேலை | மதம் | |
| ஊர் | ஓவரூர் | தாலுக்கா | |

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது ஓவரூரில் வசித்துக்கொண்டு சிற்ப வேலை செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியும். நடுவில் நிற்கும் எதிரி செந்தில்நாதன், மூன்றாவது நிற்கும் நபர் முருகானந்தம், முதலில் நிற்கும் நபர் சையது சுல்தான் ஆவார். ( சாட்சி எதிரிகளை சரியாக அடையாளம் காட்டுகிறார்) எங்கள் ஊரில் வடுவழகன் என்பவர் 2015-ல் வருட வாக்கில் இறந்துபோய்விட்டார். அப்போது அருள்ஜோதி என்பவர் மூலம் இறப்பு நிகழ்வுக்கு வந்திருந்த எதிரி செந்தில்நாதன் மற்றும் முருகானந்தம் எனக்கு அறிமுகமானார்கள். அவர்கள் இருவரும் என்னிடம் வெளிநாட்டிற்கு ஆள் அனுப்புவதாக சொன்னார்கள். செந்தில்நாதன் சொன்னதன் அடிப்படையில் நான் தஞ்சாவூருக்கு மருத்துவ பரிசோதனைக்கு சென்றேன். அப்போது ரூ.50 ஆயிரம் கொடுத்தேன்.மொத்தம் ரூ.1,20,000/- கேட்டார்கள். செந்தில்நாதனிடம் முதலில் ரூ.50 ஆயிரம் பணமும் பாஸ்போர்ட்டும் கொடுத்தேன். அதன் பிறகு பாஸ்போட்டில் சீல் குத்தவேண்டும் என்று சொல்லி எங்கள் வீட்டில் வந்து முருகானந்தமும், செந்தில்நாதனும் ரூ.30 ஆயிரம் வாங்கிக்கொண்டு போனார்கள். அதன் பிறகு செந்தில் நாதன் இந்தியன் வங்கி கணக்கில் இருமுறை ரூ.10 ஆயிரம் அனுப்பினேன். அதன்பிறகு டிக்கெட் வந்துவிட்டதாக சொல்லி நாங்கள் போய்கொண்டிருந்தபோது பாதிவழியில் டிக்கட் கேன்சல் ஆகிவிட்டதாக திரும்பி வீட்டிற்கு போக சொன்னார்கள். அதன்பிறகு

எதிரி முருகானந்தம் வீட்டிற்கு போய் கேட்டேன். செந்தில்நாதன் போனை சுவிட்ச் ஆப் செய்துவிட்டார். முருகானந்தம் சரியான பதில் சொல்லவில்லை. அதன்பிறகு மீண்டும், மீண்டும் கேட்டபோது நாசா டிராவல்ஸ்லில் பணம் கொடுத்துள்ளதாகவும், அது மதுரையில் உள்ளதாகவும் அங்கு போய் கேட்டுக்கொள்ளுங்கள் என்றும் முருகானந்தம் சொல்லிவிட்டார். நான் நாசா டிராவல்ஸிக்கு போகவில்லை. திருவாரூரில் நாங்கள் 11 பேர் வந்து புகார் கொடுத்தோம். வெளிநாடு அனுப்புவதாக பணம் வாங்கிக்கொண்டு எங்களை ஏமாற்றி விட்டதாக புகார் கொடுத்தோம். எதிரிகள் மூன்றுபேர் மீதும் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

புகாரை நான் எழுதி கொடுத்தேனா என்றால் கார்த்தி என்பவர்தான் எழுத்துமூலமான புகார் கொடுத்தார். நான் வங்கி கணக்கு மூலம் பணம் அனுப்பியதாக சொல்வதற்கான ஆவணங்களை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் அந்த செலான் கவுண்டர் பகுதியை எடுத்து வைக்கவில்லை. ஆதலால் கொடுக்கவில்லை. நான் உண்மையில் வங்கி கணக்கு மூலம் செலுத்தியிருந்தால் அதற்கான ஆவணத்தை போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியிடம் நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், என்னிடம் வெளிநாடு அனுப்புவதாக 1வது எதிரி சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது பாஸ்போர்ட் 1வது எதிரியிடம்தான் இருந்தது. நான் 1வது எதிரியிடம் பாஸ்போர்ட் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் கொடுத்திருந்தால் அதனை போலிசார் கைப்பற்றி தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. முதன்முதலில் துக்கவீட்டில் வெளிநாட்டிற்கு அனுப்புவதாக அருள்ஜோதி கேட்டாரா என்றால் அருள்ஜோதி மூலம் கேட்டார்கள். அதன் பிறகு இரண்டு நாள் கழித்து எதிரி செந்தில்நாதன் எனது வீட்டிற்கு வந்து நான் பார்த்து அனுப்புகிறேன் என்று வந்து கேட்டார். 1வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் 2வது எதிரி சையது சுல்தானை நேரில் பார்த்ததோ, பேசியதோ இல்லை என்றால் சரிதான். அவரிடம் நான் பாஸ்போர்ட்டோ, தொகையோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 2வது எதிரியை தவறாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

புகார் கொடுக்க நாங்கள் 11 பேர் போனோம். 2016 ம் வருடம் புகார் கொடுத்தோம். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 2015 ம் வருடத்திலேயே புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக போராட்டம் நடத்தினோம் என்றால் சரிதான். ( சாட்சி மீண்டும் போராட்டம் நடத்தவில்லை மனு கொடுத்தோம் என்று கூறுகிறார். ) நாங்கள் 11 பேர் மட்டும்தான் போனோம். அந்த செய்தி பேப்பரில் வந்தது என்றால் சரிதான். நாங்கள் போய் புகார் கொடுக்க போனபோது எதிரி முருகானந்தம் அங்கு இருந்தாரா என்றால் இல்லை. நான் எழுத்துமூலமாக புகார் கொடுக்கவில்லை . கார்த்தி என்பவர் எனக்காக எழுதி கொடுத்தார். மற்றவர்களும் புகார் கொடுத்தார்கள். எனக்கு சரியாக எழுத, படிக்க தெரியாது. போலிசார் என்னை புகார் கொடுத்த பின்னர் விசாரிக்கவில்லை. ஒருமுறை அழைத்து செந்தில்நாதனை காட்டினார்கள். நான் சொல்வதுபோல் முருகானந்தம் துக்க நிகழ்வுக்கு வரவில்லை என்றும், எனது வீட்டிற்கும் வரவில்லை என்றும், வெளிநாடு அனுப்புவதாக பணம் எதுவும் வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி முருகானந்தத்தை கடைசியாக நான் எப்போது பாரத்தேன்? என்றால் எனது வீட்டில் பணம் வாங்க வந்தபோது பார்த்தேன். அதன் பிறகு பார்க்கவில்லை. எதிரி முருகானந்தமும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாக நாங்கள் புகார் செய்த பின்னர் கேள்விப்பட்டேன். முருகானந்தத்திற்கும் எனக்கு நேரடி தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. காவல் துறையினர் சொல்லிக்கொடுத்தப்படி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. முருகானந்தம் என்னிடம் எவ்வித பணமும் வாங்கவில்லை என்றும், அவர் எவ்வித பலனும் அடையவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.